1975 அக்டோபர் 27] [மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்]

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப் பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன் :—

(1) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சி மன்ற உறுப் பினர்கள் (பதவிக்கால நீடிப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1975).

(2) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1975),

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

மதுரையிலுள்ள சௌராஷ்டிரா பள்ளியில் இலவச உடை வழங்கும் போது 19 பேர்கள் உயிர் இழந்தது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் 26-10-75 அன்று மதுரையில் உள்ள சௌராஷ்டிரா பள்ளியில் ஆயிரக் கணக்கான ஜனங்களுக்கு இலவசமாக உடைகள் வழங்குகிறபோது 18 பெண்களும் ஒரு ஆணும் இறந்திருக்கிறார்கள்....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முதலில் உறுப்பினர் தீர்மானத்தைப் படிக்கவேண்டும். பிறகு பேசலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : துணைத் தலைவர் அவர்களே, "26-10-75 அன்று மதுரையிலுள்ள சௌராஷ்டிரா பள்ளியில் இலவச உடை வழங்கும் போது 19 பேர்கள் உயிர் இழந்தது பற்றி விவாதிக்க இந்த சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டு கிறேன்''.

அங்கே 19 பேர் இறந்திருக்கிறார்கள். இலவசமாக புடவைகளும் வேஷ்டிகளும் கொடுக்கிறார்கள் என்று சொன்ன உடனேயே ஆயிரக் கணக்கான மக்கள் அதைப் பெறுவதற்காகச் செல்லும் தருணத்திலே துரதிருஷ்டவசமாக உயிர் இழந்திருக்கிறார்கள். இதிலிருந்து நாட்டிலே எவ்வளவு ஏழைகள் இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. இதுமாதிரிச் சம்பவங்கள் பல்வேறு நிலைகளிலே உயிரை இழந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டுகூட ஒரு சினிமா தியேட்டரிலே டிக்கெட்டு வாங்கிக்கொண்டிருக் கும்போது, நெரிசல் காரணமாக 4 பேர்களுடைய உயிர் போயிருக்கின்றது. இந்த வருஷமும் அதே மாதிரி இலவசமாக உடை கொடுத்திருக்கிறார்கள் என்ற காரணமாக, 19 பேர்களுடைய உயிர் போயிருக்கிறது. ஆகையினால் இம்மாதிரியான சம்பவங்கள் நடக்காதிருக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு தகுந்த நடவடிக்கை எடுத்தால்தான், இம்மாதிரியான சம்பவங்கள் நடக்காமல் இருக்கும். இந்தத் தீர்மானத்தை பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்குமாறு நான் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்,

222 மதுரையிலுள்ள சௌராஷ்டிர பள்ளியில் இலவச உடை வழங்கும் போது 19 பேர்கள் உயிர் இழந்தது குறித்து

[1975 அக்டோபர் 27

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே. மதுரை, திருநகரிலே அமைந்துள்ள மில்லின் உரிமையாளர் ராமாச்சாரி என்பவர். அவருடைய தாயாரின் பெயரில் 'சீதா லட்சுமி டிரஸ்ட்' என்ற ஒரு டிரஸ்ட்டை அமைத்து அதை நடத்தி வருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, ஒரு லட்சத்துச் சொச்ச ரூபாய் அளவுக்குப் புடவைகளையும் அதைப்போல வேஷ்டிகளையும் சௌராஷ்டிரா வகுப்பிலே உள்ள ஏழை எளிய மக்களுக்குத் தருவது வழக்கமாக இருந்து வருகிறது. அதைப் போலவே இலவசமாகத் துணி வழங்குகிற விழா இந்த ஆண்டோடு ஐந்தாவது ஆண்டாக அந்த நிறுவனத்தாரால் கொண்டாடப்பட்டது. முன்பு எல்லாம் இந்த டிரஸ்ட்டைச் சேர்ந்தவர்கள் தீபாவளிக்கு முன்னர் ஒரு குறிப்பிட்ட நாளில் சௌராஷ்டிரா உயர்நிலைப்பள்ளிக் கட்டிடத்திற்குச் சென்று, துணியைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறி, அதற்கென்று அடையாள வில்லைகளை அவர்கள் கொடுத்து வருவது வாடிக்கை. கடந்த ஆண்டு அதில் சில தவறுகள் நடந்து விட்ட காரணத்தால், அப்படி வில்லைகள் வழங்கப்படுகிற நேரத்தில், அது உரியவர்களுக்குப் போய்ச்சேராமல் தவறுகள் நடந்துவிட்ட காரணத்தால், இந்த ஆண்டு அதற்குரிய வில்லைகளை வாங்குவதற்கு சௌராஷ்டிரா உயர்நிலைப் பள்ளிக்கு வரவேண்டுமென்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அறிவிப்பு வெளிப்படையாகவோ, பகிரங்கமாகவோ அறிவிக்கப்படவில்லை.

கடந்த 26-ம் தேதி அன்று வில்லைகளைப் பெறுவதற்கு, காலை பத்து மணிக்கு ஏராளமான பெண்கள் சௌராஷ்டிரா உயர்நிலைப் பள்ளியில் கூடி இருந்திருக்கிறார்கள். காலை பத்து மணிக்கு அந்த டிரஸ்டினுடைய அதிகாரிகள் பள்ளியினுடைய நுழை வாயிற் கதவைத் திறந்து விட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட எண்ணிக்கை உள்ளவர்கள் ஒரே நேரத்தில் சென்று அந்த வில்லைகளை வாங்குவதற்கு நெருக்கி அடித்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள். அந்த நெருக்கடியிலே 17 பெண்களும், ஒரு சிறுவனும், இரண்டு வயதுள்ள ஒரு சிறு குழந்தையும் தவறி கீழே விழுந்திருக்கிறார்கள். பின்னால் வந்த கூட்டம், அவர்களை ஏறி மிதித்து முன்னே சென்ற காரணத்தால், இத்தனை உயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டது. நாடே அந்தச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடையக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டு விட்டது.

இந்தத் தீர்மானத்தை இங்கு கொண்டுவந்த திரு. தீக்ஷிதர் அவர்கள் வறுமைதான் இதற்கெல்லாம் காரணம் என்று சொன்னார்கள். வறுமை ஓரளவுக்குக் காரணமாக இருந்தாலும், இதுபோன்று இனமாக சேலைகள் வேஷ்டிகள் தரப்படுகின்றன என்று சொல்லப்படுகின்ற நேரத்தில், அவைகளைப் பெறவேண்டும் என்ற ஆசையோடு செல்லுகிறவர்கள், ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்து கொண்டிருப்பார்களேயானால், பொறுமையோடு நடந்துகொண்டிருப்பார்களேயானால், இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படுவதற்கு நியாயமே இல்லை. இவர்கள் எங்கே தங்களுக்குக் கிடைக்காமல் போய்விடுமோ என்ற சந்தேகத்தின் காரணமாக, ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு அந்த அடையாள வில்லைகளை வாங்க வேண்டும் என்று அவர்கள் செய்த முயற்சியின் காரணமாகத்தான் இவ்விதப் பரிதாப

நிலை ஏற்படுகிறது. இப்படி அடையாள வில்லைகளைக் கொடுப்பதற்கான ஒரு நிகழ்ச்சி ஏற்பாடாகி இருக்கிறது என்றோ, அதற்கு காவல்துறை கண்காணிப்பு அல்லது அவர்களுடைய பாதுகாப்பு தேவை என்றோ அந்த நிர்வாகத்தினரால் போலீஸ் அதிகாரிகளுக்கு எந்தவிதமான தகவலும் அனுப்பப்படவில்லை. இந்தச் சம்பவம் நடந்த பிறகுதான், போலீஸ் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிந்து, உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்து சென்றிருக்கிறார்கள். நான் கோவையிலிருந்து திண்டுக்கல்லுக்கு வருகின்றபோது, பழனியிலே வருகிற நேரத்தில் இந்தச் சம்பவம் குறித்து எனக்குச் சொல்லப்பட்டது. உடனடியாக மாண்புமிகு அமைச்சர் திரு. ஓ. பி. இராமன் அவர்களை மதுரைக்கு விரைந்து செல்லுமாறு நான் வேண்டினேன். அவர்களும் அங்கு சென்று இறந்து விட்டவர்களுடைய குடும்பத்திற்கு ஆறுதல் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்ற அதிகாரிகளும் உடனடியாக அங்கே சென்றிருந்தார்கள். முதலமைச்சர் நிதியிலிருந்து மறைந்துவிட்ட குடும்பங்களுக்கு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டாயிரம் வரையிலே தருவது என்ற வகையிலே, 40 ஆயிரம் வரையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவம்பற்றி விசாரணை நடத்தி, அறிக்கை தருமாறு மதுரை கோட்டாட்சித் தலைவருக்கு மாவட்ட ஆட்சித் தலைவரும் ஆணையிட்டிருக்கிறார்கள். பொதுவாக இப்படிப்பட்ட சம்பவம் டிக்கெட்டு வாங்குகிற இடத்தில் நடக்கிறது என்று சொன்னார்கள். நமக்கு நாமே வகுத்துக் கொள்ளவேண்டிய ஒழுங்கு முறைக்கு விரோதமான காரியங்களால்தான் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுகின்றன. எல்லோரும் பொறுமையாக இருந்து தங்களுக்குக் கிடைக்க வேண்டியவைகளைப் பெறுவதிலும் அல்லது காணவேண்டியவைகளைக் காண்பதிலும் பொறுமை காட்டுவார்களேயானால், இம்மாதிரியான அசம்பாவிதங்கள் ஏற்படாமல்தவிர்க்கலாம் என்பதை எடுத்துக்கூறி, மாண்டுவிட்ட வர்களுடைய குடும்பத்தார்க்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே இதைவிட வேறு விளக்கம் வேண்டியதில்லை என்றும், ஒத்திவைக்கத் தேவை இல்லை என்றும், துணைத்தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு எனது இசைவை மறுக்கிறேன்.

(பிற்பகல் 4-40)

4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1975)

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மேலவைத் துணைத் தலைவரவர்களே,